# மாலைக்கதிர்
Maalaikkathir


சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 26 புதன்கிழமை 12.11.2025 கதிர் 368



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# கைக்குண்டு, வாள், ஹெரோயினுடன் யாழ்ப்பாணத்தில் நேற்று இருவர் கைது!



யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது போது இரண்டு பேர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது கைக்குண்டு மற்றும் வாளுடன் ஒருவரும், இரண்டு கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயினுடன்ஒருவரும்கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தி பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க சுன்னாகம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்

# அயல்நாடுகளில் குண்டுகள் வெடித்தாலும் இலங்கைக்கு எந்த ஆபத்தும் இல்லையாம்

## – இப்படி நாடாளுமன்றில் கூறினார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, நவ. 12

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்திருந்தாலும் அந்தச் சம்பவங்களால் இலங்கைக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இன்று நாடாளுமன்ற அமர்வின்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

“நாட்டில் உளவுத்துறை அமைப்புகள் தீவிரமாக இருப்பதால் பாதுகாப்புப் பிரச்சினை இல்லை. இலங்கைக்கு இது போன்ற அச்சுறுத்தல் இருப்பதாக எந்தத் தகவலும் இல்லை. இலங்கையின் உளவுத்துறை தீவிரமாக உள்ளது.

நமது பாதுகாப்புத்துறை, குறிப்பாக ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் பிரிவு, தேசிய பாதுகாப்பில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. எனவே, தேசிய பாதுகாப்பு குறித்து எந்தக் கேள்வியும் இல்லை.” – என்றார்

யாழ். பல்கலைக்கழக வெற்றிடங்களை நிரப்புவதில்

# ஆளுந்தரப்பு எம்.பி அதிகாரத் தலையீடு

## ஊழியர்கள் விசனம்




யாழ்ப்பாணம், நவ. 12

வடக்கில் கடந்த அரசுகளின் ஆட்சிக் காலத்தைப் போலவே, அரச திணைக்களங்களில் ஆளுந்தரப்பின் அதிகாரத் தலையீடுகள் தொடர்வதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா

7➤

# கைதான முன்னாள் அமைச்சர் பிரசன்ன பிணையில் விடுவிப்பு



கொழும்பு, நவ. 12

இலஞ்ச, ஊழல் விசாரணைஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, பிரசன்ன ரணதுங்கவை 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகள் மற்றும் ஒரு

7➤

# கெலிஓயா விபத்தில் பெண் ஒருவர் பலி!

## சிறுமி உட்பட இருவர் படுகாயம்



பேராதனை, நவ. 12

கம்பளை - கண்டி பிரதான வீதியில் கெலிஓயா, கரமட விகாரைக்கு அருகில் இன்று இடம்பெற்ற கோர விபத்தில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்த விபத்தில் சிறுமி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவில் இருந்து கொழும்பை நோக்கிப்

7➤

# கிரிந்த பகுதியில் பிடிபட்ட 345 கிலோ போதைப்பொருள்



கொழும்பு, நவ.12

கடல் வழியாகக் கொண்டுவரப்பட்டு நிலப்பகுதிக்கு மாற்றப்பட்ட 300 கிலோகிராமுக்கும் அதிகமான போதைப்பொருட்களுடன் 8 சந்தேகநபர்களை மேல் மாகாண வடக்குக் குற்றப் பிரிவினர் இன்று அதிகாலையில் கைது செய்தனர்.

கிரிந்த, அந்தகலவெல்ல கடற்கரைப் பகுதியில் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே இந்த கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திஸ்ஸமஹாராம பகுதிக்கு கடல் மார்க்கமாக போதைப்பொருள் கொண்டு வரப்படுவதாக மேல் மாகாண வடக்குக் குற்றப் பிரிவின் பணிப்பாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஒலுகல அவர்களுக்குத் தகவல் கிடைத்திருந்தது.

இதன்படி, அவர் இந்தத் தகவலைத் தெற்கு மாகாணப் பொறுப்பதிகாரியான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத்திற்கு அறிவித்த நிலையில், தெற்கு மாகாண பொலிஸ் குழுவுடன் இணைந்து இன்று அதிகாலை கிரிந்த, அந்தகலவெல்ல கடற்கரையில் விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி, ஆழ்கடலில் இருந்து பலநாள் மீன்பிடிப் படகு ஒன்றில் கொண்டுவரப்பட்ட போதைப்பொருள், சிறிய படகு ஒன்றுக்கு மாற்றப்பட்டமை தெரியவந்துள்ளது.

சிறிய படகில் கடற்கரையை நோக்கி கொண்டு வரப்பட்ட போதைப்பொருட்கள், கயிறு ஒன்றின் உதவியுடன் கடலில் மிதக்கவிடப்பட்ட நிலையில், அவற்றை எடுத்துச் செல்ல வந்த 7 சந்தேகநபர்கள் கடற்கரையில் வைத்துப் பொலிஸாரால் முதலில் கைது செய்யப்பட்டனர்.

கடலில் மிதந்து கொண்டிருந்த போதைப்பொருள் அடங்கிய 19 பொதிகளும் கரைக்குக் கொண்டு வரப்பட்டு கிரிந்த பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

சுமார் 345 கிலோகிராம் எடையுள்ள இந்தப் போதைப்பொருள் ஹெரோயின் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கிரிந்த பொலிஸ்நிலையத்திற்குக்கொண்டுவரப்பட்ட 7 சந்தேகநபர்களைத் தவிர, பின்னர் மற்றொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், போதைப்பொருள்கடத்தலுக்குப்பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 6 வாகனங்களையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாக 'அத தெரண' செய்தியாளர் தெரிவித்துள்ளார். இந்தக் கடற்கரைப் பகுதியில் நீண்டகாலமாக போதைப்பொருள்கடத்தல்இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# விதை நெல் உற்பத்திக்கு காப்புறுதித் திட்டம் அறிமுகம்

கொழும்பு, நவ.12

விதை நெல் உற்பத்தி செய்யும் பண்ணைகளில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கைக்கு காப்புறுதித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளிடமிருந்து கிடைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் இந்தக் காப்புறுதித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

விதை நெற்செய்கைக்கு வெள்ளம், வறட்சி, நோய்கள், பூச்சித் தாக்குதல்கள், இயற்கைப் பேரழிவுகள் மற்றும் காட்டு யானைகளினால் ஏற்படும் சேதங்களுக்கு இந்தத் திட்டம் காப்பீடு வழங்குகிறது.

ஒரு ஏக்கர் செய்கைக்காக ஒரு போகத்திற்கு ரூ. 13,600%- தவணை செலுத்துவதன் ஊடாக ஒரு ஏக்கருக்கு ரூ. 180,000%- இழப்பீடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை கூறுகிறது.

இந்த விதை நெல் பண்ணைகளுக்கு காப்புறுதிப் பாதுகாப்புப் பெற வேண்டுமானால், அவை விவசாயத் திணைக்களத்தின் விதைப் பதிவுச் சேவையில் கட்டாயம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் அச் சபை வலியுறுத்துகிறது.

விதை நெல் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயிகளைச் செய்கையில் தக்கவைத்துக்கொள்வதே இதன் பிரதான நோக்கம் என்றும் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)



# புதிய அரசியல் கட்சியை பல சவால்களுக்கு மத்தியில் அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்ப நடவடிக்கை

புதிய அரசியல் கட்சி உருவாக்கப்பட்டு அதனை அடிமட்டத்தில் இருந்து கட்டியெழுப்பி உள்ளதாகவும், கட்சியின் தலைமைச் செயலகத்தை பல சவால்களுக்கு மத்தியில் மிக விரைவில் மட்டக்களப்பில் திறக்கவுள்ளதாக அதன் கட்சியின் ஸ்தாபகரான ஜெயா சரவணா தெரிவித்துள்ளார்.

குறித்த கட்சியின் ஸ்தாபகரால் இன்றையதினம் (12.11.2025) ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் ஒரு கட்சியை உருவாக்கி வருவதாகவும் அக் கட்சியின் தலைமைச்செயலகம் மிக விரைவில் மட்டக்களப்பு மண்ணில் திறக்கப்பட இருப்பதாகவும் அச் செய்தியை என்னிடம் கேட்டு உறுதிப்படுத்தி

சென்ற வாரம் ஊடகங்களில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

இந்த விடயத்தில் பல நாடுகளில் இருந்தும் பல ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், நண்பர்கள் எல்லோரிடமிருந்தும் அழைப்புகள் வந்தவண்ணமுள்ளன.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியில் இருந்து விலகி விட்டீர்களா? என்ன நடந்தது? என கேட்டிருந்தார்கள்.

சென்ற வருடம் ஓகஸ்ட் மாதம் அக் கட்சியில் இருந்தும் உபதலைவர் பதவியில் இருந்தும் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் உத்தியோக பூர்வமாக விலகிக் கொண்டேன்.

அத்துடன் அக் கட்சியின் இளைஞர் அணியான எனது கட்டுப்பட்டில் இருந்த அம்மான் படையணியானது நிரந்தரமாக கலைக்கப்பட்டுவிட்டது.

இன்று எனது ஒரு வருடத்திற்கு மேலாக எனதும் , என் அருமைத்தம்பிகளின் உழைப்பினாலும் எமது புதிய கட்சியை அடிமட்டத்தில் இருந்து கட்டியெழுப்பியுள்ளோம். இக் கட்சியானது விரைவில் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட இருக்கின்றது. என்பதனை கூறிக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கட்சியானது என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது. எமது பயணம் எதை நோக்கியதாக இருக்கும் என்பதற்கான விடைகள் எமது கட்சியின் ஆரம்ப விழாவில் தெரியப்படுத்தப்படும் என்பதனை உறுதிப்பட தெரிவித்து கொள்வதாக தெரிவித்துள்ளார். (ஐ)

## கண்களைக் கட்டிக் கொண்டு கொழும்பு மேயர் நடைப்பயணம்



கொழும்பு, நவ.12

கொழும்பு மேயர் வ்ரே காலி பால்தசார் நேற்று செவ்வாய்க்கிழமை பார்வைக் குறைபாடுள்ளவர்கள் தினமும் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒரு குழுவுடன் இணைந்தார்.

பார்வைக் குறைபாடுள்ளவர்கள் எதிர்கொள்ளும்சிரமங்களை அனுபவித்து எடுத்துக்காட்ட மேயர் பால்தசார் கண்களை கட்டிக்கொண்டு கொழும்பில் ஒரு நடைப்பயணம் மேற்கொண்டார்.

அவருடன் இலங்கையின் முதல் பார்வைக் குறைபாடுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வாவும் இருந்தார்.

“என் கண்கள் கட்டப்பட்டிருக்கின்றன, அதனால் பார்வை இல்லாமல் நகரத்தில் இருப்பது எப்படி இருக்கும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்,” என்று கொழும்பு மேயர் வ்ரே காலி பால்தசார் கண் கட்டப்பட்ட நிலையில் கூறினார். (ஐ)

## எதிர்க்கட்சியினரிடம் ஹிட்லர் IMF இடம் பூனை! நாமல் ராஜபக்ச சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.12

ஜனாதிபதி எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் ஹிட்லர் போன்று கத்துகின்றார். சர்வதேச நாணய நிதியத்திடம் மட்டும் பூனை போல் இருக்கின்றார். ஹிட்லர் அவருடைய சர்வாதிகாரத்தாலே அழிந்தார் என்பதை ஜனாதிபதி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2026ஆம்ஆண்டிற்கானவரவுசெலவுத்திட்டம் மீதான 3 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்குஅவர்மேலும்உரையாற்றியதாவது,

ஜனாதிபதி அநுரகுமார வரவு செலவு திட்ட உரையின்போது என்னை இங்கு ஹிட்லர் என்றும் சர்வாதிகாரி என்றும் கூறினார்கள். அமெரிக்காவும், ரஷ்யாவும் இணைந்து ஹிட்லரை தோற்கடித்ததுபோல, எதிரணிகள் ஒன்றிணைந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை தோற்படிப்பார்களாம். ஆனால் யார் இங்கு ரஷ்யா?அமெரிக்கா? என்று கேட்டார்.

யார் இங்கு ரஷ்யாவாக இருந்தால் என்ன அமெரிக்காவாக இருந்தால் என்ன அது முக்கியமில்லை. ஹிட்லர் அவருடைய சர்வாதிகாரத்தாலே அழிந்தார் என்பது தான் முக்கியம்.

ஜனாதிபதி எங்களிடம் ஹிட்லர் போன்று கத்துவதை போன்று ஐ.எம்.எப் யிடம் கத்துங்கள் பார்க்கலாம். அங்கு மட்டும் பூனை போல் இருக்கிறீர்கள்.

சர்வதேசநாணயநிதியத்தைவிரட்டுவதாக கூறிக்கொண்டே ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார். ஆனால் எங்களுக்கு போடும் சத்தத்தை சர்வதேச நாணய நிதியத்திற்கு போடுவதில்லையே.

மக்களுக்கு அநீதியாக வரி அறவிட வேண்டாம். பொருளாதாரம்வீழ்ச்சியடையும் என்றும் சர்வதேச நாணய நிதியத்திடம் கூறுங்களேன். அதைக் கூறமாட்டார் என றார். (ஐ)

# வடக்கில் போராட்டத்தில் குதித்த அரச தாதியர் உத்தியோகத்தர்கள் – நோயாளர்கள் அவதி






வட மாகாணத்தில் இன்று காலை முதல் 24 மணிநேர பணிப்புறக்கணிப்பில் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் ஈடுபட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வருகை மற்றும்வெளியேறும் பதிவுக்காக ஏனைய ஊழியர்களுடன் சேர்த்து ஒரே கையொப்பப் பதிவு புத்தகம் பயன்படுத்த வேண்டும் என்ற வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில், வட மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாண சபைகளிலோ அல்லது மத்திய அரசாங்கத்தின் வைத்தியசாலைகளிலோ இத்தகைய நடைமுறை அமுலில் இல்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

வடமாகாணத்தில்மாத்திரம்இதுதன்னிச்சையாக அமுல்படுத்தப்படுவது பாரதூரமான விடயமாகும் என்றும்அந்த அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வடமாகாணத்தைச் சேர்ந்த தாதியர்கள் மேற்கொண்டுள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலும் தாதியர்களால் மேற்கொள்ளும்சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி குருதி மாதிரிகளை பெறுதல், ஊசி போடுதல், உள்ளிட்ட தாதியர்களினால் வழங்கும் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நோயாளர்கள் திரும்பி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ)

# டெல்லி கார் வெடிப்புக்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக திரிணாமுல் காங்கிரஸ் வலியுறுத்தல்!!





டெல்லி கார் வெடிப்புக்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் என திரிணாமுல் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது. தலைநகரில் நேற்று முன்தினம் மாலை 6.52 மணிக்கு வெள்ள நிற /ஹண்டாய் ஐ20 கார் ஒன்று பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியதில் 13 பேர் உயிரிழந்தனர். 30க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில், டெல்லி கார் குண்டு வெடிப்புக்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் என திரிணாமுல் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதை நிறுத்திவிட்டு பிரதமர் மோடி பூடான் சென்றது ஏன்..? என்று விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அக்கட்சி வலியுறுத்தியுள்ளது. டெல்லியில் நடந்தது தீவிரவாதி தாக்குதல் என்பதை கூட அரசால் தீர்மானிக்க முடியவில்லை என்று விமர்சித்துள்ள காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுப்ரியா ஷ்ரினேட் நாடு ஏக்கத்தன சூழலில் உள்ளபோதும் பிரதமர் பூடான் சென்றது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார். நாடு பாதுகாப்பான கைகளில் இல்லை என்றும் சுப்ரியா ஷ்ரினேட் சாடியிருக்கிறார். (ஐ)

## காலியாக உள்ள முதன்மை கல்வி அலுவலர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்!

காலியாக உள்ள முதன்மை கல்வி அலுவலர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" என போற்றப்படும் தமிழகத்தில் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காகவும், தேர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்காகவும் பள்ளிக்கல்வித்துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதேசமயம் பெரும்பாலான மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. கிருஷ்ணகிரி, கரூர், திருப்பூர், சிவகங்கை, பெரம்பலூர், நீலகிரி, திருவள்ளூர், தஞ்சாவூர், வேலூர், தேனி, சென்னை, தூத்துக்குடி, காஞ்சிபுரம், அரியலூர், ராணிபேட்டை, ராமநாதபுரம், மயிலாடுதுறை என 18 மாவட்டங்களில் முதன்மை கல்வி அலுவலர்கள் இல்லை.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசு 10-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் 13 புதிய தொடக்கப் பள்ளிகளும், 5 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், அவற்றை செயல்படுத்துவதற்கான நிதி மற்றும் ஆசிரியர் பணியிடங்களுக்கும் அனுமதி அளித்து பள்ளிக் கல்வித்துறை அரசாணை வெளியிட்டுள்ளது. அந்த புதிய பள்ளிகள் பட்டியலில் உள்ள கிருஷ்ணகிரி, திருப்பூர், திருவள்ளூர், வேலூர், சென்னை, காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் முதன்மை கல்வி அலுவலர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன. புதிய பள்ளிகள் தொடங்குதல், தரம் உயர்த்துதல் போன்ற முக்கியமான பணிகளை செய்யும் இடத்தில் அந்த மாவட்ட கல்வித் துறையின் முதன்மை அதிகாரி இல்லாத பட்சத்தில் எவ்வாறு சிறப்பாக செயல்படுத்த முடியும்?

இதேபோல் 11-ஆம் வகுப்பு தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களை ஊக்கப்படுத்தி 11, 12 ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற தயார்படுத்துதல், அரசு பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் 'நடுவுல கொஞ்சம் கற்றலைத் தேடி' திட்டத்தின் வாயிலாக கூடுதல் கவனம் தேவை என கண்டறியப்படும் மாணவர்களின் கற்றல் திறனை முன்னேற்றுவதற்கு பொறுப்பாசிரியர்களை கொண்டு சிறப்பு வகுப்புகள் நடத்துவதை கண்காணித்தல், 'தடைகளைத் தாண்டி தேர்ச்சி' திட்டத்தின் மூலம் பள்ளி செல்லா மாணவர்களை கண்டறிந்து மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்காக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கல்வியின் அவசியத்தை விளக்கி விழிப்புணர்வூட்டுதல், கல்வியாண்டின் இறுதிக் காலம் என்பதால்

மாணவர்களுக்கான கலை, கலாச்சார, விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், ஆசிரியர்கள் மாணவர்களிடையேயான உறவை மேம்படுத்துதல், ஆசிரியர்கள் மாணவர்கள் குறித்த புகார்களை உடனுக்குடன் விசாரித்து தீர்வு காணுதல், பருவ மழைக் காலம் என்பதால் பள்ளிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், எல்லாவற்றிலும் முக்கியமாக 10 மற்றும் 12 வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள், செய்முறைத் தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளதால் 2026 தொடங்கியது முதல் சுமார் இரண்டரை மாத காலம், சுமார் 17 லட்சம் மாணவர்கள் பங்கேற்கின்ற பொதுத்தேர்வுகளில் அதிக கவனம் செலுத்துதல், பாடங்களை விரைவாக முடித்து மாணவர்கள் தேர்வினை எதிர்கொள்வது குறித்த பயிற்சியளித்தல் என கல்வித்துறையின் பல்வேறு பணிகளையும், திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டியது அந்தந்த மாவட்டத்தின் முதன்மை கல்வி அலுவலரின் சீரிய கடமைகளாகும்.

இவைகள் மட்டுமல்லாது தனியார் பள்ளிகளில் நடைபெறும் நிகழ்வுகள், குறைபாடுகள் குறித்த பெற்றோர்களின் புகார்கள் மீதான நடவடிக்கைகளையும் கண்காணிக்க வேண்டிய பணியும் முதன்மை கல்வி அலுவலரின் பணி ஆகும். கல்வித்துறையில் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை ஒருங்கிணைக்க வேண்டிய மாவட்டத்தின் முதன்மை கல்வி அதிகாரி பல மாவட்டங்களில் இல்லாமல் இருப்பது கவலையளிக்கிறது. எனவே உடனடியாக காலியாக உள்ள மாவட்டங்களுக்கான முதன்மை கல்வி அலுவலர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# எஸ்ஐஆருக்கு எதிர்ப்பு தெரிவித்து நாமக்கல்லில் திமுக கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்



நாமக்கல்லில் திமுக கூட்டணி கட்சி சார்பில், தேர்தல் ஆணையத்தை கண்டித்தும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு (எஸ்ஐஆர்) எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை வைத்து, கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜேஸ்குமார் எம்பி பேசியதாவது: இந்தியாவில் இதற்கு முன்பு 8 முறை வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் நடைபெற்றுள்ளது. தமிழகத்தில் கடைசியாக கடந்த 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நடைபெற்றது. அப்போது தமிழகத்தில் எந்த தேர்தலும் நடைபெறவில்லை.

ஆனால், இன்னும் சில மாதங்களில் தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தை அவசர, அவசரமாக செய்ய வேண்டிய அவசியம் என்ன?. தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம், சுமார் 2 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர்.

இவர்களில் கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களின் வாக்குரிமையை பறிக்கும் வகையில், வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தை, தற்போது தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ளது. கணக்கெடுப்பு படிவம் தரவில்லை எனக்கூறி, வாக்காளர் பட்டியலில் இருந்து பெயரை நீக்கம் செய்ய வாய்ப்புள்ளது. பீகார் மாநிலத்தில், சமீபத்தில சுமார் 60 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு உள்ளது.

இவர்களில் 45 லட்சம் பேர், காலங்காலமாக காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. இதேபோல், தமிழகத்திலும் திமுகவுக்கு ஆதரவான வாக்காளர்களை நீக்கம் செய்ய, தேர்தல் ஆணையம் மூலம், மோடி அரசு முயற்சிக்கிறது. ஆனால், அது தமிழகத்தில் நடைபெறாது. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் திமுக வெற்றி பெற்று, முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் 2வது முறையாக பொறுப்பு ஏற்பார். இதை தடுக்கும் நோக்கில் அதிமுகவும், பாஜவும் சேர்ந்து நடத்தும் நாடகம் தான் வாக்காளர் பட்டியல் திருத்தமாகும்.

அவர்களது எண்ணம் பலிக்காது. திமுகவும் அதன் கூட்டணி கட்சியினரும், வீடு வீடாக சென்று, எஸ்ஐஆர் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள். இவ்வாறு ராஜேஸ்குமார் எம்பி தெரிவித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில், மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, மாதேஸ்வரன் எம்பி, எம்எல்ஏ ராமலிங்கம், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் பார்.

இளங்கோவன், மாவட்ட அவை தலைவர் மணிமாறன், திமுக மாநில நிர்வாகிகள் ராணி, வழக்கறிஞர் நக்கீரன், டாக்டர் மாயவன், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சித்திக், செய்தி தொடர்பாளர் செந்தில், வழக்கறிஞர் தமிழரசு, திமுக ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கொமதேக, விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சிகள், மதிமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு எஸ்ஐஆர் திருத்தத்தை கண்டித்து கோஷமிட்டனர்.

அமித் ஷாவின் எண்ணம் தமிழ்நாட்டில் நிறைவேறாது

ஆர்ப்பாட்டத்தில் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி பேசுகையில், 'எஸ்ஐஆர் திருத்தத்தை தீவிரமாக எதிர்க்கும்படி, தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டார். அதன்படி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

எஸ்ஐஆர் திருத்த பணியில், திமுகவினர் உஷாராக இருக்க வேண்டும். எஸ்ஐஆருக்கு ஆதரவளிக்கும் பாஜ, அதிமுகவுக்கு கண்டனம் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் யாரிடமும் ஏமாறக்கூடாது.

பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் எண்ணம், தமிழ்நாட்டில் நிறைவேறாது. அவர்கள் எத்தனை முயற்சி எடுத்தாலும், திராவிட மாடல் தலைவரிடம் எடுபடாது,' என்றார். கொமதேக நாமக்கல் மாவட்ட செயலாளர் மாதேஸ்வரன் எம்பி பேசுகையில், 'பாஜ அரசின் திட்டங்களால் நாடு முழுவதும், அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்ஐஆர் திருத்தத்தின் மூலம், பீகாரில் 60 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மழைக்கால கூட்டத்தொடரை பாஜக அரசால் சுமூகமாக நடத்த முடியவில்லை. தற்போது டெல்லியில் குண்டு வெடித்துள்ளது. மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத அரசாக பாஜ அரசு உள்ளது. வரும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரும், பாஜவால் சுமூகமாக நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும்,' என்றார். (ஐ)




# குழந்தைகளிடம் அதிகம் காணப்படும் *ADHD*



அட்டென்ஷன் டிஃபிளிக்ட் ஹைப்பர்ஆக்டிவிட்டி டிஸ்ஸ ார்டர் ( என்பது குழந்தைகளுக்கு ஏற்படும் ஒரு சிக்கலான நரம்பியல் கோளாறாகும். சுருக்கமாக சொன்னால் இது கவனக்குறைவு சீர்குலைவு என்று கூறலாம். இந்தியாவில் பள்ளி வயது குழந்தைகளில் சுமார் 7% பேர் ADHD நோயால் பாதிக்கப்படுகின்றனர். இது குழந்தை பருவத்தில் மிகவும் பொதுவான நரம்பியல் வளர்ச்சி நோய்களில் ஒன்றாகும்.

ADHD-ஆல் பாதிக்கப்படும் நபர் வெளியுலக வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட உறவுகளின் செயல்திறனை கணிசமாக பாதிக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள நபர் தங்களின் உணர்ச்சிகளை நிர்வகிப்பதில் சிரமப்படுவார்கள். இவர்கள் மிகவும் கவன குறைவாகவும், அதே சமயம் அதிவேகமாகவும் இருப்பார்கள். இவர்களால் ஒரே இடத்தில் நீண்ட நேரம் உட்கார முடியாது.

ஒருவர் பேசும் போது அதை கவனிக்கும் திறன் எப்படி உள்ளது, பிறருடன் பழகும் திறன் உள்ளிட்டவற்றை அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். உங்கள் செயல்பாட்டில் அமைதி தெரியவில்லை, நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டை இழந்து ஒரு விஷயத்தை செய்கிறீர்கள், தேவையற்ற நடத்தைகளை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தால், அதிக கவனக்குறைவுடன் இருக்கிறீர்கள் எனில் அது ADHD-ஆக இருக்க கூடும்.

ADHD அறிகுறிகள் இருப்பின் கவனக்குறைவு அறிகுறிதான் முதலில் தோன்றும். எந்த ஒரு விஷ யத்திலும் அதிகபட்சமாக 15 நிமிடங்களுக்கு மேல் கவனம் செலுத்த முடியாது. பல படிகளை உள்ளடக்கிய டாஸ்க் ஒன்றை கொடுக்கும் போது, யுனுஉனு கொண்ட குழந்தைகள் அல்லது பெரியவர்கள் அந்த டாஸ்க்கை தொடங்க அல்லது முடிக்க மிகவும் சிரமப்படுவார்கள். இது பெரியவர்களுக்கும் பொருந்தும். ஏதாவது ஒரு செயலை செய்வது அல்லது அதன் வழிமுறைகளைப் பின்பற்றுவதில் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடுவதால் இது நிகழ்கிறது.

ADHD பாதிப்பு கொண்ட நபர் அதிக மறதி கொண்டவர்களாக இருப்பார்கள். எதிலும் ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதை பெரிதாக நினைக்க மாட்டார்கள். (7ஆம் பக்கம் பார்க்க..)



# மனித வெடிகுண்டு தாக்குதல் பாகிஸ்தானில் 12 பேர் பரிதாப உயிரிழப்பு: 27 பேர் காயம்



பாகிஸ்தானில் நீதிமன்றம் அருகே நடத்தப்பட்ட மனித வெடிகுண்டு தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர். மேலும் 27 பேர் காயமடைந்தனர். பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தில், நீதிமன்றத்தின் அருகே காவல்துறையின் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் அடையாளம் தெரியாத நபர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க செய்து தாக்குதல் நடத்தினார்.

இதில் அந்த நபர் வெடித்து சிதறி உயிரிழந்தார். அங்கு நிறுத்தப்பட்டு இருந்த வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன. இந்த குண்டுவெடிப்பில் சுமார் 12 பேர் உயிரிழந்தனர். மேலும் 27 பேர் பலத்த காயமடைந்தனர். தகவல் அறிந்து விரைந்த போலீசார் அந்த பகுதியை தங்களது கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்துக்கு இதுவரை எந்த தனிநபரோ, அமைப்போ பொறுப்பேற்கவில்லை. தெஹ்ரீக் இ தலிபான் பாகிஸ்தான் இந்த தாக்குதலை நடத்தியிருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)




## ஒரு லட்சம் பேருக்கு நோயை பரப்பும் 'மெட்ராஸ் ஐ'யுடன் இசைவிழாவில் பங்கேற்ற பிரபலம்: இங்கிலாந்து மக்கள் கொந்தளிப்பு

தொற்றுநோயான 'மெட்ராஸ் ஐ' பாதிப்புடன் பொது நிகழ்ச்சிக்குச் சென்ற பெண் பிரபலம் ஒருவருக்கு சமூக வலைதளங்களில் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இங்கிலாந்தைச் சேர்ந்த சமூக வலைதள பிரபலமான மடலின் வொயிட் ஃபெடிக், தனது 30வது பிறந்தநாளைக் கொண்டாட, அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஆர்லாண்டோவில் நடைபெற்ற மாபெரும் இசை விழாவுக்குச் சென்றுள்ளார். சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்ற அந்த விழாவிற்குச் செல்வதற்கு முன், தனக்கு 'மெட்ராஸ் ஐ' நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அவர் தனது டிக்டாக் வீடியோவில் வெளிப்படையாகப் பதிவு செய்துள்ளார். அந்த வீடியோவில் அவரது கண்கள் சிவந்து வீங்கிய நிலையில் காணப்பட்டன. அந்தப் பதிவில், 'ஹாலோவீன் பண்டிகைக்காக தனது கணவர் பயன்படுத்திய இரண்டு டாலர் மலிவான மேக்கப் மூலமாக இந்த தொற்று தனக்கு பரவியது.

மெட்ராஸ் ஐ இவ்வளவு தீவிரமாக தொற்றும் நோய் என்பது எனக்குத் தெரியாது' என்று அவர் கூறியிருந்தார். இந்த வீடியோ வெளியானதைத் தொடர்ந்து இணையத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. பயனர்கள் பலரும் அவரது செயலை 'வெறுக்கத்தக்க, சுயநலமான மற்றும் பொறுப்பற்ற செயல்' என்று கடுமையாக விமர்சித்தனர். சுகாதாரப் பணியாளர்கள் உட்பட பலர், மெட்ராஸ் ஐ எளிதில் பரவக்கூடிய ஒரு தொற்றுநோய் என்றும், இவ்வளவு பெரிய பொது நிகழ்வில் கலந்துகொள்வது ஆயிரக்கணக்கானோருக்கு நோயைப் பரப்பும் அபாயத்தை உருவாக்கும் என்றும் எச்சரித்தனர்.

இந்த விமர்சனங்களுக்குப் பதிலளித்த மடலின், 'மெட்ராஸ் ஐ நோயின் தீவிரம் குறித்த கண்ணோட்டம், அமெரிக்காவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையே உள்ள கலாசார வேறுபாடாக இருக்கலாம். இங்கிலாந்தில், மக்கள் கைகளைக் கழுவி, கண்களைத் தொடாமல் இயல்பாக தங்கள் பணிகளைத் தொடர்வார்கள். இதற்காக யாரும் பள்ளி அல்லது வேலைக்கு விடுப்பு எடுப்பதில்லை' என்று விளக்கம் அளித்தார். ஆனால், வைரஸ் மற்றும் பாக்டீரியாவால் ஏற்படும் மெட்ராஸ் ஐ மிகவும் எளிதில் பரவக்கூடியது என்றும், அதைக் கட்டுப்படுத்த சிறந்த சுகாதாரம் அவசியம் என்றும் மருத்துவ நிபுணர்கள் உறுதிப்படுத்துகின்றனர். (ஐ)



துருக்கியில் ராணுவத்துக்கு சொந்தமான சரக்கு விமானம் விபத்துக்குள்ளானது. அசர்பைஜான் -ஜார்ஜியா எல்லைப்பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. அஜர்பைஜான் மற்றும் ஜார்ஜியா அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து விமானத்தை தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சி-130 விமானம் அஜர்பைஜானில் இருந்து புறப்பட்டு துருக்கி திரும்பிக்கொண்டிருந்தபோது விபத்தில் சிக்கியுள்ளது. இதில் 20 பேர் பலியாகி விட்டனர். (ஐ)

## ஆளுந்தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சராக இருந்த காலத்தில் இடம்பெற்றது போல் நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளில் ஆளுந்தரப்பைச் சேர்ந்த எம்.பி. ஒருவர் அதிகமாகத் தலையீடு செய்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 7 வருடங்களுக்கு மேலாக நிரப்பப்படாமல் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆளணி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் பெரும் இழுபறி நிலை காணப்பட்டு வந்தது. பல்கலைக்கழக ஊழியர்சங்கம்அதனைக்கண்டித்து எதிர்ப்புப் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தது. அதன் பின்னணியில், பல்கலைக்கழகத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கடந்த வாரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனையறிந்த அரச தரப்பு எம். பி ஒருவர், வெற்றிடங்களை நிரப்பும் போது, தனது அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும், தன்னுடைய அனுமதியுடனுமே நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் என்று நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு உதவி செய்யுமாறு தாம் கோரிக்கைகளை முன்வைத்த போது பாராமுகாமாக இருந்து விட்டு, அனுமதி கிடைத்ததும் சம்பந்தமே இல்லாமல் மூக்கை நுழைக்கும் இந்தச் செயல் ஊழியர்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தி இருக்கின்றது எனவும், முன்னைய ஆட்சிக் காலங்களைப் போலவே தனது உறவினர்களையும், நண்பர்களையும் ஆள்சேர்ப்பில் உள்நுழைக்க முயற்சிக்கும் இந்த எம்.பியின் செயல் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் மீது நம்பிக்கை இழக்க வைக்கின்றது எனவும் குறித்த ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

## கெலிஓயா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயணித்த தனியார் பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த கடை மீது மோதியுள்ளது.

அத்துடன், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றையும் அந்த பஸ் மோதித் தள்ளி முன்சென்று, வீடொன்றின் மதில் மீது மோதி நின்றுள்ளது.

கடையில் இருந்த பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

ஐந்து வயது சிறுமி மற்றும் ஆண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட நான்கு நிறுவனங்களின் ஊழியர்களுக்கு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து மருத்துவக் காப்புறுதி பெறப்பட்ட போது, ஒரு நிறுவனத்துக்கு அநியாய இலாபம் பெற்றுக்கொடுத்ததன் மூலம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ரூ. 4,750,828.72 நட்டம் ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று காலை முன்னிலையாகியிருந்த போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்ட பிரசன்ன ரணதுங்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்துப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# கடைக்குள் புகுந்த பஸ்: பெண் பலி

பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெலிஓய, கரமட பிரதேசத்தில் புதன்கிழமை (12) பிற்பகல் 1:00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், கரமட பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான தக்ஷிலா ரத்நாயக்க (வயது 35) அவர் கடையில் இருந்தபோது சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி அதிவேகமாக வந்த ஒரு தனியார் பஸ்ஸே இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பஸ் முதலில் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு முச்சக்கரவண்டியுடன் பலமாக மோதி, அதனைத் தொடர்ந்து ஒரு வீட்டிற்குச் சேதம் விளைவித்துவிட்டு, இறுதியாக கடைக்குள் புகுந்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டியின் சாரதியும், உயிரிழந்த தாயின் ஆறு வயது மகளும் மேலதிக சிகிச்சைக்காகப் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய தனியார் பஸ்ஸின் சாரதியை பேராதனைப் பொலிஸார் உடனடியாகக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதுடன், மேலதிக விசாரணைகளைப் பேராதனை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# பிறப்புச் சான்றிதழ்கள் தபால் மூலம் வழங்கப்படும்



இலங்கை தபால் சேவை மூலம் குடிமக்களுக்கு தேசிய பிறப்புச் சான்றிதழ்களை நேரடியாக வழங்குவதற்கான ஒரு முன்னோடித் திட்டத்தை இலங்கை புதன்கிழமை (12) அன்று ஆரம்பித்துள்ளதாக பதிவாளர் நாயகம் துறை அறிவித்துள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சர் சந்தன அபேரத்னவின் தலைமையில் கம்பஹா மாவட்ட செயலகத்தில் இந்த முயற்சி தொடங்கப்பட்டது.

இது அதிகாரப்பூர்வ ஆவணங்களின் பாதுகாப்பான மற்றும் திறமையான விநியோகத்தை மேம்படுத்த பதிவாளர் நாயகம் துறைக்கும் அஞ்சல் துறைக்கும் இடையிலான கூட்டு முயற்சியைக் குறிக்கிறது.

மின்-சிவில் பதிவுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டம், தற்போது 2021 ஜனவரி 1, க்குப் பின்பு பிறந்த குழந்தைகளுக்கு வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்களை உள்ளடக்கியது.

புதிய அஞ்சல் கூட்டாண்மை பொதுமக்களுக்கு விரைவான மற்றும் நம்பகமான சேவையை உறுதி செய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த முயற்சியை ஒரு "வரலாற்று மைல்கல்" என்று அமைச்சர் அபேரத்ன பாராட்டினார், இந்த சேவையை நாடு தழுவிய அளவில் விரிவுபடுத்துவதற்காக அஞ்சல் துறையுடன் ஒரு முறையான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) விரைவில் கையெழுத்திடப்படும் என்று குறிப்பிட்டார்.

பொது சேவை வழங்கலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அரசாங்கத்தின் பரந்த டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிர்வாக சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுடன் இந்த நடவடிக்கை ஒத்துப்போகிறது என்றும் அவர் கூறினார்.

# கிளிநொச்சியில் பொருத்தமற்ற குடிநீர் விநியோகம்



கிளிநொச்சி மாவட்டத்திற்கு நீர்வழங்கல்வடிகாலமைப்புச் சபையால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற குழாய் வழி குடிநீர் பொருத்தமற்ற வகையில் காணப்படுகிறதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சியின், பரவிப்பாஞ்சான், திருநகர். பரந்தன்,பூநகரி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற நீரானது சேற்று நீரின் நிறத்திலும் மணத்திலும் காணப்படுகின்றதாகவும் குடிநீர் உட்பட அனைத்து தேவைகளுக்கும் குழாய் வழி நீரை பயன்படுத்தும் மக்கள் இதனால் பெரிதும் சிரமப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு பொருத்தமற்ற வகையில் விநியோகிப்படுகின்ற நீர் தொடர்பாக ஆதாரங்களுடன் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாக தெரிவித்த மக்கள், உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே பொது மக்களின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக தேசிய நீர் வழங்கல்வடிகாலமைப்புச் சபையை தொடர்பு கொண்டு வினவிய போது "கிளிநொச்சி மாவட்டத்திற்கு இரண்டு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. ஒன்று புதிதாக நவீன தொழிநுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையம் இரண்டாவது ஏற்கனவே காணப்படுகின்ற பாரம்பரிய முறையிலான பழைய நீர் சுத்திகரிப்பு நிலையம். தற்போது பெய்த மழையுடன் கிளிநொச்சி குளத்தின் நீரில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக ஆதாவது அதிகளவு சேற்று நீர் குளத்தை வந்தடைந்தமையால் பழைய நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக அவற்றை முழுமையாக சுத்திகரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கிளிநொச்சியின் ஒரு பகுதி பிரதேசங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற நீர் கலங்கிய நீராக காணப்படுகின்றது. ஆனால் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக விநியோகிக்கப்படுகின்ற நீரில் இவ்வாறான நிலைமை ஏற்படுவதில்லை.

இருப்பினும் கிளிநொச்சி முழுவதற்கும் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக நீரை விநியோகிப்பதற்கு அதன் கொள்ளளவு போதுமானதாக இல்லை எனத் தெரிவித்த அவர்கள் தம்மால் விநியோகிக்கப்படுகின்ற நீரின் தரம் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவே பொது மக்கள் அச்சமின்றி பயன்படுத்த முடியும். அத்தோடு தற்காலிக ஏற்பாடாக கிளிநொச்சி முழுவதற்கும் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து நீர் விநியோகம் மாற்றப்பட்டுள்ளது.

என்றும் ஆனாலும் மக்களின் பாவனைக்கு ஏற்ப முழுமையாக வழங்க முடியாத நிலை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட நீர் விநியோகமே மேற்கொள்ளப்படும்" எனவும் தெரிவித்தனர். (ஐ)

# குழந்தைகளிடம்....

அடிக்கடி குழப்பத்துடன் காணப்படுவார்கள். மறதி மற்றும் குழப்பம் இரண்டின் காரணமாக கவனச்சிதறலுடன் கூடிய நடத்தையை கொண்டிருப்பார்கள். இதனால் இவர்கள் தங்களின் இலக்கை மறந்து எளிதில் திசை திரும்பிவிடுவார்கள். தங்கள் பொருட்களை சரியான இடத்தில் வைக்க மாட்டார்கள்.

ஏற்கனவே நாம் கூறியபடி ADHD பாதிக்கப்பட்டவர்கள் ஓரிடத்தில் சில நிமிடங்கள் கை, கால்களை வைத்து கொண்டு அமைதியாக உட்காருவது என்பது அரிது. குழந்தைகளாக இருப்பின் ஆசிரியர்கள் வகுப்பில் பாடம் நடத்தி கொண்டிருக்கும் போதே அதில் கவனம் செலுத்தாமல் கிளாஸை ரவுண்ட் அடிப்பார்கள். ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தாலும் கை மற்றும் கால்களை அசைத்தபடி நெளிந்து கொண்டே இருப்பார்கள். அமைதியாக இருந்தாலும் அதிகபட்சம் 20 நிமிடங்கள் தான். அதற்கு மேல் அவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள்.

அதே போல மற்றவர்களை பேச விடாமல் இடைமறித்து இவர்கள் பேசி கொண்டே இருப்பார்கள். மேற்காணும் அறிகுறிகள் 6 மாதத்திற்கும் மேல் நீடித்தால் நிச்சயமாக தகுந்த நிபுணர்களின் உதவியை நாடுவது அவசியம் என்கிறார்கள் நிபுணர்கள்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2025 வெளியிடப்பெற்றது.